# வாலாஜாபேட்டை நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2022 - 2023

# வாலாஜாபேட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2022-2023

## அமைப்பும் நிர்வாகமும்

**ஆட்சி எல்லை**

வாலாஜாபேட்டை நகராட்சி முதன் முதலாக 02.11.1866-ல் மூன்றாம்நிலை நகராட்சியாக துவக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்:85, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி.5) துறை நாள்.22.05.1998 அன்று, இரண்டாம்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இந்நகராட்சியின் பரப்பளவு 2.64 ச.கி.மீ.ஆகும். 1991-ல்ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படியும், தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் (திருத்தம்) 1991-ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், வாலாசாபேட்டை நகராட்சியில் 20 வார்டுகளை 24 வார்டுகளாக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

**மக்கள் தொகை:**

இந்நகராட்சி மக்கள்தொகை 1971ம்ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 13,179 ஆகும். 1981ம்ஆண்டில் 19563 ஆக கணக்கெடுப்பு செய்யப்பட்டு 1991ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 26,972 ஆக உயர்ந்தது. 2001ம் ஆண்டில் 29,475 ஆக கணக்கெடுப்பின்படி 32001 ஆக உள்ளது. இதில் ஆண்கள் 15874ம் பெண்கள் 16127ம் ஆகும். 2011-ம் ஆண்டின் மக்கள்தொகை 47498, ஆண்கள் 23422-யும் பெண்கள் 24076-யும் உள்ளனர்.

**நகராட்சி அலுவலர்கள்:-**

**ஆணையர்**

01.04.2022 முதல் 31.08.2022 வரை திரு.க.சரவணன், பொறியாளர், ஆணையர் பொறுப்பினை கூடுதலாக கவனித்து வந்தார். 11.09.2022 முதல் 16.12.2022 வரை திரு.குமரிமன்னன் ஆணையராக பணிபுரிந்தார்.17.12.2022முதல்31.03.2023 திரு.எம்.பரமுராசு, பொறியாளர், ஆணையராக பொறுப்பு கூடுதலாக கவனித்து வந்தார்.

**மேலாளர்**

01.04.2022 முதல் 31.05.2022 வரை திரு.தி.பா.முத்துகுமார், உதவியாளர், மேலாளர்(பொ) 01.06.2022 முதல் 31.03.2023 வரை திரு.ஆர்.தேவராஜ், கணக்கர், மேலாளர் பொறுப்பு வகித்தனர்.

**கணக்கர்**

01.04.2022 முதல் 31.05.2022 வரை திரு.நே.பாண்டியன், கணக்கராகவும், 01.06.2022 முதல் 31.03.2023 வரை திரு.ஆர்.தேவராஜ் கணக்கராகவும் பணி புரிந்துள்ளார்.

**பொறியாளர்**

திரு.க.சரவணன் 01.04.2022 முதல் 24.06.2022 வரை நகராட்சி பொறியாளராகவும், 11.07.2022 முதல் 23.08.2022 வரை திரு.சி.சுரேஷ் என்பவர் நகராட்சி பொறியாளராகவும், 31.10.2022 முதல் 31.03.2023 வரை திரு.மு.பரமராக,நகராட்சி பொறியாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

**நகரமைப்பு ஆய்வர்**

01.10.2022 முதல் 31.03.2023 வரை திரு.பிரசாந்த்.நகரமைப்பு ஆய்வராக பணியாற்றியுள்ளார்.

**துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர்**

30.05.2022 முதல் 31.03.2023 வரை திரு.எஸ்.பாலசுப்ரமணியன், துப்புரவு அலுவலராகவும், 01.04.2022 முதல் 04.05.2022 வரை திரு.பெ.முருகன், துப்புரவு ஆய்வராகவும், 17.06.2022 முதல் 31.10.2022 வரை திரு.அவிவேக், 18.10.2022 முதல் 31.03.2023 வரை துப்புரவு ஆய்வராகவும் பணிபுரிந்துள்ளார்.

**நகர மன்றம்**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 2011 மக்கள் தொகை அடிப்படையில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பில் பொது 1, பெண்-2, 3 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 24 நகர மன்ற உறுப்பினர்களில் பெண்கள் 12 நபர்களும், ஆண்கள் 12 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனார் வார்டுஎண் 11 நகர மன்ற உறுப்பினர் திருமதி.ஜுரிணிதில்லை அவர்களை நகரமன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். வார்டுஎண் 05 நகரமன்ற உறுப்பினர் திரு.W.M.கமலராகவன் என்பவர் நகரமன்ற துணைதலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்

| வ.எண் | வார்டுஎண் | நகரமன்றதலைவர்/<br>நகரமன்றதுணைதலைவர்மற்றும்உறுப்பினர்கள்பெயர்கள்<br>திரு/திருமதி |
|---|---|---|
| 1 | 11 | திருமதி. ஜுரிணிதில்லை,<br>நகரமன்றதலைவர் |
| 2 | 5 | திரு.W.M.கமலராகவன்<br>நகரமன்றதுணைதலைவர் |
| 3 | 1 | திருமதி.ம.சித்ராமகேந்திரன்<br>1-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 4 | 2 | திரு.கு.தியாகராஜன்<br>2-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 5 | 3 | திரு.கு.யோகன்ராஜ்<br>3-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 6 | 4 | திருமதி.பிருந்தா சிவப்பிரகாசம் |

| | | |
|---|---|---|
| | | 4-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 7 | 6 | திரு.ப.செங்கைபாபு<br>6-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 8 | 7 | திருமதி.தி.கனிமொழிகஜேந்திரன்<br>7-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 9 | 8 | திரு.எஸ்.இர்பான்<br>8-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 10 | 9 | திருமதி.சு.தீபாசசிகுமார்<br>9-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 11 | 10 | திருமதி.சுமதிபாபு<br>10-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 12 | 12 | திருமதி.ச.பரீதாசலாம்<br>12-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 13 | 13 | திரு.சே.நந்தகுமார்<br>13-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 14 | 14 | திரு.கோ.சுரேஷ்<br>14-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 15 | 15 | திரு.கோ.செந்தில்குமார்<br>15-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 16 | 16 | திருமதி.ஜெ.லதாஜெய்சங்கர்<br>16-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 17 | 17 | திரு.W.G.முரளி<br>17-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 18 | 18 | திரு.என்.டி.சீனிவாசன்<br>18-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 19 | 19 | திருமதி.யு.ஜமுனாயுவராஜ்<br>19-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 20 | 20 | திருமதி.ஜெ.லலிதாஜெகதீசன்<br>20-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 21 | 21 | திருமதி.தொ.லரமேஷ்<br>21-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 22 | 22 | திரு.என்.டி.ரவிச்சந்திரன்<br>22-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 23 | 23 | திருமதி.கவிதாசரவணன்<br>23-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |
| 24 | 24 | திருமதி.ஜா.நிக்கத்பேகம்ஜாவித்<br>24-வதுவார்டுநகரமன்றஉறுப்பினர் |

**நகர மன்ற கூட்டம்:**

இந்த நிதியாண்டில் 16 முறை நகரமன்ற கூட்டம் நடைபெற்றது. இதில் 256 பொருளின் மீது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நியமனகுழுக் கூட்டம்:**

நிதியாண்டில் நியமன குழுகூட்டம் நடைபெறவில்லை.

**அம்மா உணவகம்**

இந்நகராட்சியில் அம்மா உணவகம் ஒன்று பஜார் தெருவில் அமைந்துள்ளது. அம்மா உணவகத்தில் 6 நபர்கள் பணிபுரிந்து வருகிறார் அறிக்கை ஆண்டில் ஊதியம் ரூ.12 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**நிர்வாகம்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை 10 நாள். 23.01.2023ன்படி அறிக்கையாண்டில் கீழ்கண்ட பணியிடங்கள் விவரம்.

| வ.எண் | பணியிடத்தின்பெயர் | பணியிடம் | வ.எண் | பணியிடத்தின்பெயர் | பணியிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | மேலாளர் | 1 | 10 | பணிமேற்பார்வையாளர் | 1 |
| 2 | உதவியாளர்கள் | 2 | 11 | பிட்டர்நிலை II | 1 |
| 3 | இளநிலைஉதவியாளர்கள் | 5 | 12 | பணிஆய்வர் | 2 |
| 4 | தட்டச்சர் | 1 | 13 | மின்பணியாளர்நிலை II | 1 |
| 5 | பதிவறைஎழுத்தர் | 1 | 14 | நகரமைப்புஆய்வர் | 1 |
| 6 | அலுவலகஉதவியாளர்கள் | 3 | 15 | துப்புரவுஆய்வர் | 1 |
| 7 | வருவாய்ஆய்வர் | 1 | 16 | களஉதவியாளர் | 1 |
| 8 | வருவாய்உதவியாளர்கள் | 3 | 17 | படவரைவாளர்நிலை III | 1 |
| 9 | நகராட்சி பொறியாளர் -நிலை III | 1 | 18 | துப்புரவுபணிமேற்பார்வையாளர் | 4 |

**தெரு விளக்கு விவரம்-**

நடப்பாண்டில் சோடியம் விளக்குகள் 137ம், குழல் விளக்குகள் 143ம் ஆக மொத்தம் 1112 விளக்குகள் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**குடிநீர்**

இந்நகராட்சியில் பிட்டர் -1(ஒருவரும்) , மேல்நிலை தொட்டி காவலர் இரண்டு நபர்களும் பணிபுரிகிறார்.

**மேல்நிலை நீர் தொட்டிகள் விவரம்.**

| | | |
|---|---|---|
| 1 | ஆற்காடு தெத்து தெரு | 3.50 இலட்சம் லிட்டர் |
| 2 | இந்திரா நகர் | 2.00இலட்சம் லிட்டர் |
| 3 | ஆற்காடு தெத்து தெரு | 1.15இலட்சம் லிட்டர் |
| 4 | கடப்பரங்கையன் தெரு-1 | 3.00இலட்சம் லிட்டர் |
| 5 | கடப்பரங்கையன் தெரு-2 | 2.50இலட்சம் லிட்டர் |
| 6 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதி | 4.00இலட்சம் லிட்டர் |

2.மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் -6 எண்ணிக்கை

3.குடிநீர் குழாய் மொத்த எண்ணிக்கை -5886

காவேரி கூட்டு குடிநீர்திட்டத்தின் கீழ் வாலாஜாபேட்டை நகராட்சிக்கு ஒரு நாளுக்கு 100000 லிட்டர் வழங்கப்படுகிறது. 2022 - 2023 அறிக்கை ஆண்டில் 14குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**கல்வி:-**

அறிக்கையாண்டில் இந்நகராட்சி பகுதியில் 5 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் நிர்வாகிக்கப்பட்டு வந்தன. புதியதாக ஒரு பள்ளி பல்லி வெங்கடாசலபதி தெருவில் துவங்கப்பட்டது. 31.03.2023 முடிய நகராட்சி கல்விக்கூடங்களில் 2022-2023ம் ஆண்டிற்கு ரூ.4,16,000/- மானியம் வரப்பெற்றது.

| வ.எண் | பள்ளியின் பெயர் | 2022-2023-ம் ஆண்டில் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி மார்க்கெட் நடுநிலைப் பள்ளி | 483 |
| 2 | நகராட்சி மத்திய துவக்கப்பள்ளி | 135 |
| 3 | நகராட்சி இருபாலர் நடுநிலைப்பள்ளி | 336 |
| 4 | நகராட்சி துவக்கப் பள்ளிசௌராஷ்டிராபள்ளி | 109 |
| 5 | நகராட்சி முஸ்லீம்பள்ளி | 14 |
| 6 | நகராட்சி வடக்கு துவக்கப்பள்ளி | 52 |
| | மொத்தம் | 1129 |

நகராட்சி பள்ளியில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினருக்காக தனியாக பள்ளிகள்ஏதும் இல்லை. மக்களுக்காக குழந்தைகள் எல்லா பள்ளிகளிலும் சேர்ந்து பயில அனுமதிக்கப்படுகின்றனர். நடப்பாண்டில் மக்களுக்காக முஸ்லீம் தொடக்கப்பள்ளியில் அதில் உருதுமொழி பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. நகராட்சி பள்ளிகள் அனைத்தும் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. எந்த பள்ளிகளிலும் விளையாட்டு திடல் ஏதும் இல்லாத நிலையில் பள்ளி வளாகத்தில் உள்ள காலியிடம் விளையாட்டுத் திடலாக பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

<u>ஆரம்பக் கல்வி நிதி:-</u>

நகராட்சியால் வசூலிக்கப்படும் சொத்துவரியில் கல்வி வரியாக 2.5% சதவீதம் விதிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் கல்வி வரியாக ரூ.25.63 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. கல்வி நிதியிலிருந்து அறிக்கையாண்டில் மற்றும் பராமரிப்புக்காக ரூ12.30இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

<u>பொதுசுகாதாரப் பிரிவு</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் MCC-3 உள்ளது. அதில் 2 MCC அணைக்கட்ரோட் பகுதியிலும், 1MCC காந்திநகர் பகுதியிலும் செயல்பட்டுவருகிறது.

<u>பரப்புரையாளர்கள் விவரம்.</u>

இந்நகராட்சியில் பரப்புரையாளர்கள் 5 நபர்களும், 1 பணிமேற்பார்வையாளரும் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு மாத ஊதியம்ரூ.-9,25,757.00 வழங்கப்பட்டுள்ளது.

தனியார்துப்புரவுபணி.

இந்நகராட்சியில் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 75 தூய்மைப்பணியாளர்கள் ஈடுப்படுத்தப்பட்டுள்ளார், இப்பணியில் டிப்பர் 4 வண்டிகளும் ஈடுப்படுத்தப்பட்டு வருகிறது.

வாகனங்கள் விவரம்

சுகாதார மேம்பாட்டிற்காக துப்புரவுபணியில் LCV-5 வண்டிகளும், BOV - 1 வண்டிகளும் PUSH CART 11 வண்டிகளும், HCV 1 வண்டியும் வாங்கப்பட்டு பொதுசுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சுடு காடுகள் விவரம்

நகரப் பகுதியில் ஒரு சுடுகாடு உள்ளது.

மின் மயான விவரம்:

தற்போது புதியதாகரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் மின்மயான பணிகள் நடைப்பெற்றுவருகிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டம்:

அரசாணைஎண்227 சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்.10.07.1997. சமூகநலம் மற்றும் சத்துணவு திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறைக்கு 01.01.1997ல் மாறுதல் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணையின்படி நடப்பு ஆண்டில் கீழ்கண்ட நகராட்சி பள்ளிகளில் சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. 1)மார்க்கெட்பள்ளி, 2)மத்தியபள்ளி, 3)இருபாலர்பள்ளி, 4)சௌராஷ்டிராபள்ளி, 5)முஸ்லீம்பள்ளி, 6)நகராட்சிவடக்குபள்ளி, மேற்கண்ட அரசு மற்றும் அரசுநிதி உதவி பள்ளிகளில் சத்துணவு மையங்கள் இயங்கி வருகிறது. 2022-2023ம் ஆண்டில் பள்ளி சத்துணவு மையங்களில் வேலை நாட்களில் நாள்தோறும் 133 மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான உணவுப்பொருட்கள் சிவில் சப்ளைகார்ப்பரேஷன் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. சத்துணவுதிட்டத்தில் கீழ்கண்டபணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ.எண் | பணியிடம் | அனுமதிக்கப்பட்ட அலுவலகபணியாளர்கள் | தற்போதுபணிபுரியும்பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உதவியாளர் | 1 | 1 |
| 2 | சத்துணவுஅமைப்பாளர்கள் | 5 | 2 |
| 3 | சமையலர்கள் | 5 | 3 |
| 4 | சமையல்உதவியாளர்கள் | 5 | 4 |

<u>பொது வாசகசாலைகள்</u>:-

இந்நகராட்சியால் நூலகம் ஒன்று உள்ளது. அரசு மாவட்டகிளை நூலகம் ஒன்று இந்நகராட்சிப் பகுதியில் அமையப் பெற்று இயங்கிவருகிறது. சொத்து வரியில் வசூலிக்கப்படும் . தொகையில் நூலக வரியாக தொகைரூ.23.49 லட்சம் அறிக்கையாண்டில் மாவட்ட நூலக அலுவலகத்திற்கு முழுவதும் செலுத்தப்பட்டது.

<u>கணினி மயமாக்கல் மற்றும் மின்னணு நிர்வாகம்</u>:

இந்நகராட்சிசொத்துவரி, தொழில்வரி, குடிநீர்கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவை கணினியில் பதியப்பட்டுள்ளது. மேலும் பிறப்பு இறப்பு பதிவுகளும் கணினியில் பதியப்பட்டு பொதுமக்களுக்கு சான்றுகள் வழங்கப்பட்டு வருகிறது நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கணினி வரி வசூல் சேவை மையத்தில் பொதுமக்களால் வரி விதிப்புகளுக்கான தொகை செலுத்தப்பட்டு வருகிறது.

<u>பொது சுகாதாரம்</u>:-

இந்நகராட்சியில் நகர நலஅலுவலர் பணியிடம் ஏதும் இல்லை. ஒரு துப்புரவுஆய்வர், 4 துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், 25 துப்புரவுபணியாளர்களைக் கொண்டு சுகாதாரப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். வாலாஜா தலைமை மருத்துவமனையில் பிறப்பு மற்றும் இறப்புகள் மருத்துவமனைமூலமாக சான்று வழங்கப்படுகிறது. நகராட்சி எல்லைக்குட்பட்ட தனியார் மருத்துவமனை மூலமாக பிறப்பு (ம) இறப்பு பதியப்பட்டு நகராட்சியால் சான்று வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மத்தியில் சுகாதாரம் சம்மந்தமான விளம்பரங்களும், பிரசாரங்களும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தேசிய போலியோ சொட்டு மருந்துமுகாம், தேசியயானைக்கால் நோய்தடுப்பு முகாம் சம்மந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான மருத்துவ சேவைகள் செய்யப்பட்டன.

-இறப்பு விகிதம் மற்றும் தாய்சேய் நல வசதி:-

அறிக்கையாண்டில் நகராட்சியில் 36 பிறப்புகளும் 169 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டது ட்சிக்கு சொந்தமான நகர்நலமையம் ஒன்று வாலாபேட்டைதெத்து தெருவில் இயங்கிவந்தது . ாது துணைஇயக்குநர். இராணிப்பேட்டை அலுவலகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. அரசு மருத்துவமனை மூலம் கீழ்கண்டவாறு தாய் மற்றும் சேய்களுக்கு மருந்து மற்றும் தடுப்பூசிகள் நலன்காக்கப்பட்டது.

| வ.எண் | மருந்து/தடுப்பூசி | பயனாளிகளின்எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பி.சி.ஜி | 836 |
| 2 | டிபிடி தட்டம்மை | 806 |
| 4 | ஜன்னிஊசி | 1085 |

ள்ளை நோய் விவரங்கள்:-

க்கைஆண்டில்கொள்ளைநோயால்பாதிக்கப்பட்டவர்விவரம்

| வ.எண் | நோயின்பெயர் | பாதிக்கப்பட்டோரின்எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காலரா | இல்லை |
| 2 | அம்மை | இல்லை |
| 3 | பிளேக் | இல்லை |
| 4 | சீதபேதி | 10 |
| 5 | வயிற்றுகடுப்பு | 374 |
| 6 | காய்ச்சல் | 2062 |
| 7 | சுவாசப்பைசம்மந்தமானநோய் | 1124 |
| 8 | இன்ப்ளுன்சாமற்றும்நாய்கடி | 1814/174 |

க்கையாண்டில் இந்நகரில் அம்மை, பிளேக் போன்ற தொற்று நோய்கள் ஏதுமில்லை. மலேரியாநோய் மருத்துவமனையால் பரிசோதிக்கப்பட்டு மருத்துவம் பார்க்கப்பட்டது.

**யானைக்கால் நோய் தடுப்பு திட்டம்:-**

இவ்வாண்டில் இந்த நோயால் இறந்தவர்கள் யாரும் இல்லை. பொதுசுகாதாரப்பிரிவு மூலம் நகரமெங்கும் பேடெக்ஸ் கொசுமருந்து தெளிக்கப்பட்டு நோய் பரவுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**துப்புரவு பணிகள்:-**

பொதுசுகாதாரப்பிரிவு துப்புரவுபணியாளர்களால் நகரில் உள்ள குப்பைகள் தினசரி அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. இந்நகராட்சிப் பகுதியில் 11 சமுதாய கழிப்பறைகள் மற்றும் 3 பொது கழிப்பறைகள் பராமரிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் மினிலாரி மற்றும் பதினொன்று புஷ்கார்டு, ஒரு பேட்டரி வண்டி ஆகியவை துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டது. 1 முதல் 24 வார்டுகளில் மகளிர் சுய உதவிகுழு மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நகராட்சியில் திறந்தவெளி கால்வாய்கள் பராமிக்கப்பட்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை:-**

2022-2023-ம் ஆண்டில் உர உற்பத்தி மற்றும் விற்பனை ஏதும் இல்லை. வன்னிவேடு கிராமத்தில் சர்வேஎண்.360/4, 362/1, 363, 364/4 மற்றும் 365 ல் அமைந்துள்ள 3.70 ½ செண்ட் இடத்தில் உரக்கிடங்கிற்காக நிலம் வாங்கப்பட்டு நகராட்சி பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

**வருவாய் இனம்:-**

அறிக்கையாண்டில் சொத்துவரியாக தொகைரூ.195.34 இலட்சமும் மற்றும் தொழில்வரியாக ரூ.16.69இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. நூலக வரியாக சொத்துவரி பொதுகாரியத்திற்காக பிரிக்கப்படும் தொகையில் ரூபாய்க்கு 10 பைசா விதம் மாவட்ட நூலக அலுவலகத்திற்கு செலுத்தப்படுகிறது.

**குத்தகை இனத்தலைப்பின் கீழ்வருமாறு 2022-2023ம் ஆண்டில் வருமான வரப்பெற்றது.**

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சிகடைகள் | ரூ.50,75,028/- |
| 2 | தற்காலிககடைகள் | ரூ.6,41,130/- |
| 3 | பேருந்துநிலையகட்டணகழிப்பிடம் | ரூ.4,36,800/- |
| 4 | தினசரிமார்க்கெட் 99 கடைகள் | ரூ.9,97,194. /- |
| 5 | பேருந்துநிலையம்பேருந்துநுழைவுகட்டணம் | ரூ.2,25,840/- |
| 6 | ஆடுஅறுக்கும்தொட்டி | ரூ.2,78,880/- |
| 7 | மாடுஅடிக்கும்தொட்டி | ரூ.70,300/- |
| 8 | தினசரிகட்டணகழிப்பிடம் | ரூ.1,25,516/- |

**நகரமைப்பு:-**

இந்நகராட்சி நகரமைப்பு பிரிவில் ஒரு நகரமைப்பு ஆய்வரும் ஒரு சங்கிலியாளரும் பணிபுரிகின்றனர். 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்பு சட்டத்தின் கீழ் வாலாஜா உள்ளூர் திட்டக்குழுமம் வீட்டுவசதி மற்றும் நகர்புறவளர்ச்சி துறை அரசாணைஎண்.195, நாள்.14.02.1991ன்படி அங்கீகரிக்கப்பட்டு அதன்படி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 01.04.2004 முதல் உரிமையாணை கட்டணம் நகர்மன்ற தீர்மானம்எண்.343 நாள்.28.05.2004ன்படி கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டுமானங்கள் முறையாக கட்டிட அங்கீகாரம் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானங்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டத்தின் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு அங்கீகாரம் பெற ஆவண செய்யப்படுகிறது. அங்கீகாரம் பெறாமல் கட்டிடம் கட்டுபவர்கள் அறிக்கையாண்டில் 42 எண்ணிக்கை கட்டிட விண்ணப்பங்கள் வரப்பெற்ற 40 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எண்ணிக்கையில் அனுமதி மறுக்கப்பட்டது.

**பொறியியல் பணிகள்:-**

நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் அறிக்கையாண்டில் கீழ்கண்ட திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டும் மற்றும் நடைபெற்று வருகின்றன.

| வ.எண் | திட்டத்தின்பெயர் | எடுக்கப்பட்டபணிகளின்எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | சட்டமன்றஉறுப்பினர்தொகுதிமேம்பாட்டு திட்டம் | 6 | 41.35 |
| 2 | பொதுநிதிபணிகள் | 2 | 19.40 |
| 3 | குடிநீர்பணிகள் Lanning | 12 | 24.40 |

மானியம்:-

| வ.எண் | விவரம் | தொகை (இலட்சத்தில்) ரூ. |
|---|---|---|
| 1 | முத்திரை தாள் | 12.75 |
| 2 | மாநில நிதிக் குழு | 469.93 |
| 3 | சுவர்ணஜெயந்தி திட்டம் | - |
| 4 | சத்துணவு திட்டம் | 4.16 |
| 5 | உள்ளாட்சி தேர்தல் | - |

வரவு மற்றும் செலவினங்கள்:-

| நிதி | வரவு ரூ. | செலவு ரூ |
|---|---|---|
| பொதுநிதி | 272.24 | 261.70 |
| குடிநீர்நிதி | 67.17 | 62.04 |
| கல்விநிதி | 25.63 | 12.29 |

தணிக்கை:-

உள்ளாட்சி நிதி தணிக்கை வேலூர் அவர்கள் மூலம் 2022-2023 ஆம் ஆண்டுக்கான தணிக்கை முடிவுற்றது.

பொதுகுறிப்பு:-

தமிழ்நாட்டில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க நகராட்சியான வாலாஜாபேட்டை நகராட்சியின் நல்லதொரு நிர்வாகத்திற்கு ஆணையருடன் ஒருங்கிணைந்து மிகுந்த ஒத்துழைப்பு தந்த நகர்மன்றத்தலைவர், நகர்மன்றதுணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரவாழ் பொதுமக்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

24/6/25

ஆணையாளர்,

வாலாஜாபேட்டைநகராட்சி.

24/06/25

இடம்: வாலாஜாபேட்டை

நாள்:24.06.2025.